MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

# அற இலக்கியங்களில் மெய்ப்பாட்டுடன் பொருள் விளக்கல்

திருமதி பெ.ஆனந்தி, தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
ananthi-tam@sfrcollege.edu.in - 9659664915

DOI 10.5281/zenodo.10627688

**Abstract :**

**Tamil literature imparts virtue. Scholars have used various methods to clarify the meaning of the eighteen moral books which were aimed only at moral pleasure. In this way, Tolkappiyar has classified the truths into eight categories. This research paper is designed to explain the ability to convey morals with this method.**

**Key Words :**

**Literature – Authenticity - Charity book**

தமிழ் இலக்கியங்கள் அறத்தை அள்ளித் தருவன. அற இன்பத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்த பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களுள் பொருளைத் தெளிவுற புலப்படுத்த பல்வேறு நெறிகளைப் புலவர்கள் கையாண்டுள்ளனர். அவ்வகையில் தொல்காப்பியர் எட்டாக வகைப்படுத்தியுள்ள மெய்ப்பாடுகளைக் கொண்டும் பொருட்புலப்பாடு நிகழ்த்தப்பட்டுள்ளது. இம்முறையிலான மெய்ப்பாட்டுடன் அறப்பொருள் எடுத்துரைக்கும் திறத்தை விளக்கும் வகையில் இவ்ஆய்வுக் கட்டுரை அமைக்கப் பெறுகின்றது.

## தொல்காப்பிய மெய்ப்பாடுகள்

தொன்மை தொல்காப்பியத்தில் வரையறுக்கப்பட்ட பல விதிகளிலே மெய்யின்கண் தோன்றும் உணர்வுகளும் மெய்ப்பாடுகளாக விளக்கப்பட்டுள்ளன.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்க”

(தொல்.பொருள். நூற்.251)

என்ற நூற்பாவில் வரிசைப்படுத்தியுள்ளார். உடலில் தோன்றும் உணர்வுகளை மெய்ப்பாடு என்பர். அந்த மெய்ப்பாட்டை தொல்காப்பியர், நகை(சிரிப்பு), அழுகை(துயரம்), இளிவரல்

VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

(அருவருப்பு), மருட்கை (வியப்பு), அச்சம்(பயம்), பெருமிதம் (வீரம்), வெகுளி (கோபம்), உவகை(மகிழ்வு) என எட்டு வகைப்படுத்துகிறார். இவ் எட்டு வகை மெய்ப்பாட்டு உணர்ச்சிகளோடும் இலக்கியங்களில் பொருட்புலப்பாடு நிகழ்த்தப் பெறுதலுண்டு.

"யார் எதை மனத்தில் கொண்டு நோக்குகிறார்களோ அது தான் அவர்களுக்குத் தோன்றுகிறது"1 என்பர். எனவே மக்கள் மனதில் கருத்தைச் சேர்க்க அவர்தம் மெய்ப்பாட்டு உணர்வுகளைத் தூண்டுதல் முதன்மையாகிறது.

**நகை**

நகை என்பதன் பொருள் சிரிப்பாகும். நகை உணர்வு எள்ளல், இளமை, பேதமை, மற்றும் மடமை காரணமாகத் தோன்றும் என்பது தொல்காப்பியர் கருத்து.

மனதின்கண் நகையுணர்வை ஏற்படுத்தி அதன்பின் கருத்தினைக் கூறும் முறைமையும் கருத்தினைக் குறிப்பிடும் போதே சிரிக்கும் வண்ணம் கூறும் முறைமையும் இலக்கியங்களில் கடைபிடிக்கப்பட்டுள்ளன.

"பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல் - பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர! - அதுவன்றோ
நாய்மேல் தவிசிடு மாறு"

(பழ.மொ.நா. பா. 106)

என்ற பழமொழி நானூற்றுப் பாடலில் பெரியவர்களுக்கு செய்ய வேண்டிய சிறப்புகளைச் சிறியவர்க்குச் செய்தல் நகைப்பிற்கு இடமாக அமையும் என்ற பொருள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கு உவமையாக யானையின் மீது போடப்படும் தவிசினை நாயின் மீது போட்டாற் போல எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கேட்போருக்கு நகைப்பினை உண்டாக்கிக் கருத்தினையும் உள்வாங்கச் செய்கிறது.

"இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்" (குறள்.1080)

என்ற குறட்பாவில் சோம்பேறியாக இருப்பவனைப் பார்த்து நிலமகளும் நகைப்பாள் என்ற செய்தி விளக்கப்பட்டுள்ளது. இது நகையின் வழி தன்மான உணர்வைத் தூண்டி நற்செயல் செய்ய வைக்க முயலுதலாகும்.

இன்பத்துப் பாலில் இடம்பெற்றுள்ள,

"யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்" (குறள்.1094)

என்ற குறளினைப் படிக்கும் போதே தலைவியின் இளமை காரணமாக எழுந்த நகை உணர்வு நம்முள்ளும் எழுவதை உணர முடியும்.

"கூர்த்து நாய் கௌவிக் கொளக் கண்டும் தம் வாயால்
பேர்த்து நாய் கௌவினார் ஈங்கு இல்லை நீர்த்து அன்றிக்
கீழ்மக்கள் கீழ ஆய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம் வாயால் மீட்டு" (நாலடி. பா.70)

இப்பாடலில் சினம் மிகுதியால் நாய் தன்னைக் கடித்து விட்டால் அதற்குப் பதிலாக நாயைத் திரும்பக் கடிப்பவர் யாரும் இல்லை. அது போல, கீழ்மக்களின் செயல்களைப் பார்த்து நாமும் அதுபோலவே செய்யக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. இதில் நாய் கடித்தால் திரும்பக் கடித்தல் எனும் உவமையை எண்ணிப் பார்க்கும் போதே நகை உணர்வு தோன்றுவது இயல்பு. இவ்வாறாக நகைத்தலாகிய சிரிப்பு உணர்வை உண்டாக்கி அதன் வழி தான் கூற வந்த கருத்தை எடுத்துரைக்கும் புலப்பாட்டு முறைமையும் அற இலக்கியங்களில் காணமுடிகிறது.

**அழுகை**

துன்பத்தின் வெளிப்பாடே அழுகையாகிறது. அழுகை பிறத்தலுக்குக் காரணங்களாகத் தொல்காப்பியர் இளிவு, இழவு, அசைவு, வறுமை எனும் நான்கினையும் சுட்டுவார். அறத்தை எடுத்துரைக்கும் அற இலக்கியத்திலும் உணர்ச்சி வெளிப்பாடு முதன்மையாகிறது.

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாது ஒன்றும் கண்பாடு அரிது" (குறள்.1049)

என்ற திருக்குறளில் வறுமையின் காரணமாகப் பிறக்கும் அழுகை உணர்வு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. நெருப்பில் கூட தூங்கலாம் ஆனால் வறுமையின் நெருப்பில் உறங்க இயலாது என்கிறார் வள்ளுவர். வறுமை தரும் துயரானது நெருப்பினை விட சுடக் கூடியது எனும் கருத்து இதன் வாயிலாகப் பெறப்படுகிறது.

“கோறலும் நஞ்சுஊனைத் துய்த்தல் கொடுநஞ்சு
வேறலும் நஞ்சுமாறு அல்லானை தேறினால்
நீடுஅங்குச் செய்தலும் நஞ்சால் இளங்கிளையை
நாடாதே தீது உரையும் நஞ்சு” (சிறு.ப.மூ. பா.11)

இப்பாடலில் துன்பத்தைத் தரக்கூடிய ஐந்து வகையான இழி செயல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அதாவது, கொல்லுதல், ஊன் உண்ணல், நிகரில்லா எதிரியை வெல்லுதல், காலம் நீட்டித்தல், சுற்றத்தாருக்குத் தீங்கு செய்தல் என்ற ஐந்தும் நஞ்சை உண்டமைப் போல துன்பம் தரக்கூடியது எனச் சுட்டப்பட்டுள்ளது.

முதுமொழிக் காஞ்சி,

“வாழாமல் வருந்தியது வருத்தம் அன்று”

(முது.மொ.கா. பா.57)

என்று சுட்டுகிறது. தன் வாழ்வைத் தனக்காக அன்றி பிறருக்காக வாழ நினைத்தல் அறம் ஆகும். அஃதன்றி தன் வாழ்வு சரியாக அமையவில்லையே என வருத்தப்படுவது உண்மையான வருத்தமாகாது என்ற கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாக, அற இலக்கியங்களில் ‘அழுகை’ எனும் மெய்ப்பாட்டு உணர்வைத் தூண்டும் பாடல் இயற்றி கருத்தைப் பெற வைத்த முறைமையைக் காணமுடிகிறது.

இளிவரல்

தொல்காப்பியர் சுட்டும் மெய்ப்பாடுகளுள் மூன்றாவதாக அமைவது இளிவரலாகும். இளிவரல் எனும் மெய்ப்பாடானது, மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்ற இவற்றின் காரணமாக வரப்பெறும். திருக்குறளில்,

“ஒருநாள் எழுநாள்போல் செல்லும் சேண்சென்றார்
வருநாள் வைத்து ஏங்கு பவர்க்கு” (குறள்.1269)

என்ற குறட்பாவில் வருத்தமாகிய இளிவரல் சுட்டப்பட்டுள்ளது. அஃதாவது பிரிந்து சென்றவர் திரும்பி வருவதை எண்ணிப் பார்த்திருக்கும் ஒருவருக்கு, ஒரு நாள் கூட ஏழு நாட்கள் போல இருக்கும் என்பது இதன் பொருள். இதன் கண் வருத்தமாகிய இளிவரல் உணர்வு பெறப்படுகிறது.

“எனக்குத் தாய் ஆகியாள் என்னை ஈங்குஇட்டு
தனக்குத் தாய் நாடியே சென்றாள், தனக்குத்தாய்

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

ஆகியவளும் அது ஆனால் தாய்த் தாய்க்கொண்டு
ஏகும் அளித்து இவ் உலகு" (நாலடி. பா.15)

என்ற நாலடியார் பாடலில் மூப்பின் பொருட்டு வரலாகும் இளிவரல் உணர்வு உணர்த்தப்பட்டுள்ளது. அதாவது என் தாயும் அவள் தாயைத் தேடிச் சென்றாள். அவளது தாயும் அவளின் தாயைத் தேடிச் சென்றாள் எனக் குறிப்பிடப்பட்டு முதுமையின் விளைவாகிய இறப்பு குறித்த கருத்துப் பெறப்படுகிறது. இதில் அச்சமாகிய மெய்பாட்டினையும் உணர முடிகிறது.

"குழவிகள் உற்ற பிணி இன்னா" (இன்னா. பா.35)

என்ற அடியில் பிணியின் காரணமாக வரும் இளிவரல் சுட்டப் பட்டுள்ளது.

இவ்வாறாக அறஇலக்கியங்களில் இளிவரல் மெய்ப்பாட்டைக் கொண்டு அடிக்கருத்துகள் எடுத்தியம்பப்பட்டுள்ளமையை அறியமுடிகிறது.

மருட்கை

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்ற நான்கு வகைப் பொருண்மையில் பிறப்பது மருட்கை எனும் மெய்ப்பாடாகும். மருட்கையை வியப்பு எனச் சுட்டுவர். இத்தகைய மருட்கை மெய்ப்பாடு கொண்ட பாடல்களும் அற இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

தலைவியைக் கண்ட தலைமகன் அவளது அழகினை வியப்போடு பாடுவதாக,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனம்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு" (குறள்.1081)

எனும் குறள் அமையப் பெற்றுள்ளது. இதில் தலைவன் தலைவியைத் தெய்வமா? அழகிய மயிலா? இல்லை உண்மையான பெண் தானா? என வியப்போடு பார்க்கிறான். அவனது அதே வியப்பு உணர்வை நாமும் பெறமுடிகிறது. மேலும்,

"பஞ்சப் பொழுது பாத்து உண்பான், கரவாதான்
அஞ்சாது உடைபடையுள் போந்து எறிவாள் எஞ்சாதே
உண்பது முன் ஈவான் குழவி பலிகொடுப்பான்
எண்பதின் மேலும்வாழ் வான்" (சிறு.ப.மூ. பா.77)

என்ற சிறுபஞ்சமூலப் பாடலில், ஐந்து வகையான நற்குணங்களை வரிசைப்படுத்தி அதைச் செய்பவன் எண்பது வயதிற்கு மேல் இருந்து நீண்ட காலம் இன்பமாக வாழ்வான் எனச் சுட்டப்பட்டுள்ளது. இப்பாடல், படிப்பவருக்கு வியப்பினை ஏற்படுத்துவது இயல்பு. ஏனெனில்

இந்த ஐந்து செயல்களைச் செய்தால் போதுமா? எண்பது வயதுவரை வாழ்வேனா? என ஒரு தனிநபரை வியப்பில் ஆழ்த்தி அதன்மூலம் கருத்தைப் புலப்படுத்தும் முறைமை சிறப்பாக அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது.

இவ்வாறாக அற இலக்கியப் பாடல்களில் மருட்கை மெய்ப்பாடும் வெளிப்பட்டு பொருளைப் புலப்படுத்தத் துணைபுரிவதனை அறியலாகின்றது.

**அச்சம்**

பயம், அச்சம் எனச் சுட்டப்படும் அச்சமாகிய மெய்ப்பாடு, அணங்கு, விலங்கு, கள்வர், இறை ஆகிய காரணிகளால் வரப்பெறும். அச்ச உணர்வை உண்டாக்கி அதன்வழி அறக் கருத்தைப் பெறச் செய்தமையை அறஇலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

“அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன்மாட்டுச் சத்துவத்தினாற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாகுந் தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப்படும்”2 என்ற கருத்து எண்ணத் தக்கது.

“தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யதாhர் ஆதரே
துன்பம் இலேம்பண்டு யாமே வனப்பு உடையேம்!
என்பர் இருகால் எருது” (சிறு.ப.மூ. பா.18)

என்ற பாடலில் அறிவுடையோரின் நூல்களைக் கற்றவர்கள் தேவர்களுக்கு இணையாகவும், நூல்களைக் கல்லாதவர்கள் பூதம், பேய் முதலியவற்றை ஒத்தவர்களாகவும் சுட்டப் படுகின்றனர். இவ்வகையில் பூதம் குறித்த அச்ச உணர்வை எழச் செய்து நூல் வாசிப்பினை ஆசிரியர் உறுதி செய்கிறார்.

“நெஞ்சத்தார் காதலவர்ஆக வெய்து உண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து” (குறள்.1128)

என்ற திருக்குறளில் தலைவியின் அச்ச உணர்வு பேசப்பட்டுள்ளது. தலைவன் தன் நெஞ்சத்தில் எப்போதும் இருப்பதால் சூடான உணவை உண்டால் அஃது அவருக்கு சுடுமோ எனத் தலைவி அச்சப்படுகிறாள். இது அன்பின் மிகுதியால் தோன்றிய அச்சமாகும்.

“இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு” (குறள்.1048)

என்ற குறளில் வறுமைத் துன்பம் நேற்று வந்து தன்னை வாட்டியது போலவே இன்றும் வந்தால் என்ன செய்வேன்? என ஐயம் கொள்ளும் மனித இயல்பு சுட்டப்பட்டுள்ளது.

VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

"வந்தது வந்தது கூற்று" (நாலடி. பா.4)

என்று புலவர் குறிப்பிடும் போது அதைக் கேட்பவர் அனைவர் மனதிலும் ஒருவித பய உணர்வு இயல்பாகவே ஏற்படுகிறது. இதன் வழி எமன் நம்மை நெருங்கிவிட்டான் என்று அச்சமடையச் செய்து நாம் இன்னமும் செய்ய வேண்டிய நற்செயல்கள் நிறைய உள்ளன என்ற அறஉணர்வைப் பெற முடிகிறது.

பெருமிதம்

பெருமிதம் எனும் மெய்ப்பாடானது கல்வி, தறுகண், இசைமை, கொடை எனும் நான்கு காரணிகளால் பிறக்கக் கூடியதாகும். "ஒரு கவிஞன் தன்னுள் பொங்கியெழும் உணர்ச்சியினை உடனடியாகப் பாட்டாக வெளிப்படுத்துவதில்லை. அவ்வுணர்ச்சிக்குக் கவிஞன் அமைதியோடு சிந்தித்துக் கலைவடிவம் தருகிறான். அவ்வுணர்ச்சி கலைநலம் பெறுதற்கேற்ற சொற்களை அமைக்கிறான்"[3] என்று குறிப்பிடுவர். எனவே கவிஞன் அடைந்த பெருமித உணர்வுகளும் கலை வடிவமாக்கப்பட்டுள்ளன.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"
(குறள்.236)

என்ற குறட்பாவில் புகழொடு தோன்றும் போது கிடைக்கும் பெருமித உணர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது.

"ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்து இழக்கும் வன்கணவர்" (குறள்.228)

என்ற குறளில் கொடையின் பெருமை வியந்தோதப்பட்டு, பிறருக்குக் கைம்மாறு கருதாமல் கொடுப்பதால் வரும் பெருமித உணர்வு சுட்டப்பட்டுள்ளது.

"பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு" (குறள்.773)

என்ற குறளில் பகைவருடன் போரிடுவதாகிய வீரமும் போரில் நடந்து கொள்ள வேண்டிய நாகரிகமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக அற இலக்கியங்களில் பெருமித சுவைப்பட பாடல்கள் பல அமைந்து பொருட்புலப்பாட்டை வலுப்படுத்துகின்றன எனலாம்.

வெகுளி

மனதில் எழும் கோபத்தை வெளிப்படுத்துவது வெகுளியாகிறது. இஃது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை எனும் நான்கின் வழி தோன்றுவதாகும். இவ்வெகுளி உணர்வும் இலக்கியங்களில் பயின்று வரப்பெற்றுள்ளது.

VOLUME – I ISSUE – 2 FEB – 2024
E-ISSN : 2584-1238

"விழல் வேண்டும் வெகுளி அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை" (நான். பா.11)

என்ற பாடலடிகளிலும்,

"செல்வது வேண்டின் அறம்செய்க! வெல்வது
வேண்டின் வெகுளி விடல்" (நான். பா.15)

என்ற பாடலடிகளிலும், வெகுளியால் ஏற்படக் கூடிய பின் விளைவுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. திருக்குறளில் வெகுளாமை (அதிகார எண் 31) என்ற ஓர் அதிகாரமே இடம்பெற்றுள்ளது. நாலடியாரில் சினம் இன்மை என்ற அதிகாரம் துறவற இயலில் இடம்பெற்றுள்ளது. இவற்றின் வாயிலாக கோபத்தினால் உண்டாகும் தீமைகள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

மேலும் சினத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்தவரே வாழ்வில் வெற்றி பெற முடியும்.தெளிவு என்பது "முழுப்பக்குவமாக நம்முடைய உணர்ச்சிகளை நன்கு புரிந்து கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்துவது அல்லது தேவையான போது அதை தக்கவாறு செயற்படுத்துதல் ஆகும்"4 என்பர்.

"காணின் குடிப்பழிஆம் கையுறின் கால்குறையும்
ஆண் இன்மை செய்யுங்கால் அச்சம் ஆம் நீள்நிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி! நீ கண்ட
இன்பம் எனக்கு எனைத்தால் கூறு" (நாலடி. பா.84)

என்ற பாடலில் நிரயமாகிய நரகத்திற்கு செல்பவரின் இயல்பு சுட்டப்பட்டுள்ளது. ஆயினும் இப்பாடலை படிப்பவர்கள் ஆசிரியர் கேட்போரின் மீது அல்லது நரகம் செல்லும் செயல் புரிந்தாரின் மீது தனது கோபத்தை வெளிப்படுத்துவதை உணர இயலும் எனலாம். துச்சாரி! என ஆசிரியர் பயன்படுத்தும் விளி இதனை உறுதி செய்கிறது. மேலும்

"சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
நிலத்துஅறைந்தான் கைபிழையாது அற்று"
((குறள்.307)

என்ற குறளில் வெகுளியை வெளிப்படுத்துதல் நிலத்தை அறைந்தவனின் கை போல மிகுந்த வலியைத் தரும் என்று சுட்டப்பட்டுள்ளது. அதாவது வெகுளியின் செயல்பாடுகளை

தான் உணர்ந்தும் பிறருக்கு உணர்த்தும் பொருட்டும் உவமைகூறி ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இவ்வாறாக, கோபத்தோடும் கோபத்தின் விளைவோடும் பல அறக் கருத்துகள் அற இலக்கியங்களில் இடம்பெற்றுப் புலப்பாட்டு நெறிக்குத் துணைபுரிந்துள்ளமையை அறியமுடிகிறது.

உவகை

மனதில் ஏற்படும் மகிழ்வு உணர்வே உவகையாகிறது. உவகையானது தான் பெற்றிருக்கும் செல்வம், புலன், புணர்வு மற்றும் விளையாட்டு ஆகிய நான்கு அடிப்படை காரணங்களால் பிறக்கிறது என்பர்.

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி உண்டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின், செல்வம் ஒன்று
உண்டாக வைக்கற்பாற்று அன்று" (நாலடி. பா.1)

என்ற பாடலில் செல்வ மிகுதியால் தோன்றும் உவகை முதல் இரண்டு அடிகளில் வரப்பெற்றுள்ளது. ஆறு வகை சுவை நிரம்பிய உணவினையும் உண்பது உவகை. அதை மனைவி ஊட்ட உண்பதும் உவகை. மறுசிகை வைத்துக் கொள்ள வற்புறுத்தும் மனைவியின் அன்பு உவகை. அதை வேண்டாம் வேண்டாம் என்று கூறி மறுத்து உண்ணுதலும் உள்ளார்ந்த உவகை. இவ்வாறு ஆசிரியர் பல உவகைகளை மிக எளிமையாகச் சுட்டிக்காட்டி பின்னர் செல்வ நிலையாமையைக் குறிப்பிட்டுள்ளார்.

"தம்இல் இருந்து தமதுபாத்து உண்டுஅற்றால்
அம்மா அரிவை முயக்கு" (குறள்.1107)

எனும் குறட்பாவில் இருவகை உவகை எடுத்தியம்பப் பட்டுள்ளது. தம் வீட்டில் தம் உணவினைப் பலருக்கும் பகிர்ந்து உண்பதாகிய உவகையும் தலைவியோடு இணைந்த காமத்தினால் தோன்றும் உவகையும் ஒப்பிடப்பட்டுள்ளன.

முடிவுரை

அற இலக்கியங்களில் எண்வகை மெய்ப்பாடுகளின் துணைகொண்டும் பொருட் புலப்பாடு நிகழ்த்தப் பெற்றுள்ளது. மெய்ப்பாட்டுடன் விளக்கும் இம்முறைமையில்

E-ISSN : 2584-1238

மனிதர்தம் உணர்வுகளோடு இயைந்து கருத்தை வெளிப்படுத்தியமை கண்கூடு. மெய்ப்பாட்டு உணர்வுகள் அனைவருக்கும் பொதுவானவை. அவை அனைவராலும் எளிமையாக புரிந்து கொள்ள இயலுபவை. எனவே பெரும்பான்மையான இலக்கியங்களில் பொருட்புலப்பாட்டு உத்தியாக இன்றளவும் கையாளப்பட்டு வருவதனைக் காணமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. பெ.தூரன், மனமும் அதன் விளக்கமும், ப.8
2. தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத்திறனாய்வியல், ப.85
3. மேலது, ப.165
4. மேலது, ப.80